# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2018–2019

## 1. அமைப்பும், மேலாண்மையும்

### 1. ஆட்சி எல்லை

இந்நகராட்சி 12.08.1949ம் தேதிய 1948 எண் உள்ளாட்சி துறை அரசாணையின்படி 01.10.1949ம் தேதி முதல் 3ம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது.10.02.1970 ம் தேதிய 194 எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அரசாணையின்படி 16.1.1970 ம் தேதி முதல் 2ம் நிலைக்கும் 21.09.1977ம் தேதிய 1532 எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணையின்படி 01.10.1977 முதல் நிலைக்கும் உயர்த்தப்பட்டு மேலும், அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (தேர்தல்) வழங்கு துறை நாள் 02.12.2008 தேர்வு நிலையாக உயர்த்தி தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் பரப்பளவு 7.51 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் எந்தவித மாறுதலும் இல்லை. 2011ம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கட்தொகை 59523 ஆகும். இதில் ஆண்கள் 28866 பெண்கள் 30657 ஆகும்.

### 2. அலுவலர்கள்

#### அ. நகர்மன்றம்

தமிழக அரசின் நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 11.6.96ந் தேதிய 135 & 136 எண் அரசாணையின்படிஇந்நகராட்சி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 30 உறுப்பினர்களை கொண்டு 24. 10.2016 வரை இயங்கி வந்தது. 01.04.2017 முதல் தனி அலுவலராக ஆணையாளர் அவர்கள் பெறுப்பேற்று இயங்கி வருகிறது.

#### ஆ. இயங்கும் அலுவலர்கள்

01.04.2018 முதல் 31.08.2018 வரை திரு.கு.பார்த்தீபன் எம்.இ பொறியாளர்ஆணையாளர் (பொறுப்பு) 31.08.2018 முதல் 18.02.2019 வரை திருமதி.கே.எம்.சுதா ஆணையாளர் 18.02.2019 முதல் 14.08.2019 வரை திரு.எஸ்.சம்பத்குமார், ஆணையாளர்(பொறுப்பு) 14.08.2019 பிற்பகல் முதல் தற்போது வரை திரு.ஆ.தாணுமூர்த்தி ஆணையாளராக பதவி வகித்து வருகிறார்.

### 2. மேலாளர்

அறிக்கை ஆண்டில் 06.04.2018 முதல் 31.03.2019 வரை திரு.எஸ்.சம்பத்குமார், அவர்கள் மேலாளராக பணிபுரிந்து வந்தார்.

### 3. கூட்டங்கள்

1. அறிக்கை ஆண்டில் மொத்தம் 25 கூட்டங்கள் நடத்தப்பட்டது. அவற்றில் சாதாரண கூட்டங்கள் 11அவசரக்கூட்டங்கள் 14 சிறப்பு கூட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை.

2. அறிக்கை ஆண்டில் மொத்தம் 388 பொருள்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவு செய்யப்படாத பொருள்கள் ஏதும் இல்லை.

### 4. குழுக்கள்

1) நியமனக்குழு, 2) ஒப்பந்தக்குழு, 3) உள்ளூர் திட்டக்குழு 4) வரிமேல் முறையீட்டு குழுக்கள் கூட்டங்களின் எண்ணிக்கையும் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| குழுவின் பெயர் | நடத்தப்பட்ட கூட்டங்கள் | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) நியமனக்குழு | 1 | 1 |
| 2) ஒப்பந்தக்குழு | -- | -- |
| 3) உள்ளூர் திட்டக்குழுமம் | 11 | 195 |
| 4) வரிமேல்முறையீட்டு குழு | -- | -- |

**5. மேலாண்மை**

அறிக்கையாண்டில் நகராட்சிக்கு தேவையான பலதரப்பட்ட படிவங்கள், அறிக்கைகள், அறிவிப்புகள் அச்சடித்த வகையிலும் மற்றும் படிவங்கள் எழுது பொருள்கள் வாங்கிய வகையிலும் ரூ.29,63,615 /– செலவு செய்யப்பட்டுள்ளது.

**6) அலுவலர்கள்**

திரு. கு. பார்த்திபன், அவர்கள் 01.04.2018முதல் நாளது வரை பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். பொறியியல் பிரிவு பணியாளர்கள் செலவு ரூ.99.00 லட்சம் ஆக இருந்தது.

**7) சாலைகள்**

நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகள் இல்லை.

நகராட்சி பராமரிப்பதில் உள்ள சாலைகளின் நீளம் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

| | அறிக்கை ஆண்டு | முந்தைய ஆண்டு |
|---|---|---|
| 1) தார் சாலை | 85.608 கி.மீ | 84.699 கி.மீ |
| 2) கல சாலை | –– | –– |
| 3) சிமெண்ட் சாலை | 15.424 கி.மீ | 15.424 கி.மீ |
| 4) சரளை, மண் சாலை | –– | –– |

நகராட்சி எல்லைக்குள் தமிழக அரசு நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 7. 2 கி.மீ. ஆகும்.

**அ. கட்டிடங்கள்**

அறிக்கையாண்டில் முதலீட்டு வேலைகள் கீழ் செலவிடப்பட்ட தொகை ரூ. 50.00 லட்சம் ஆகும்.

**ஆ. பரிசல் துறைகள்**

இந்நகராட்சியின் பராமரிப்பில் (நகராட்சி எல்லைக்குள்) பரிசல் துறைகள் ஏதும் இல்லை.

**8. இளைப்பாறும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்.**

இந்நகராட்சியில் நகராட்சி பயணியர் விடுதி கட்டிடம் ஒன்று உள்ளது. மேற்படி பயணியர் விடுதி கட்டிடம் சிந்தாமணி கூட்டுறவு அங்காடிக்கு மாதம் ரூ.15,900/– க்கு மாத வாடகைக்கு குத்தகை அடிப்படையில் விடப்பட்டுள்ளது.

**9. கருவிகள், இயந்திரங்கள் மற்றும் பணியிடங்கள்**

துப்புரவு தொழிலுக்கு பொருள்கள் கருவிகள் மற்றும் தளவாடங்கள் ஆகியவை ரூ.15,60,675/– செலவில் வாங்கப்பட்டுள்ளது.

சுண்ணாம்புத்தூள் NIL
பிளீச்சிங் பவுடர் NIL

**10. தெருவிளக்குகள்**

இந்நகராட்சியில் உள்ள சாலைகளில் 2363 எல்.இ.டி. விளக்குகளும், 8 உயர் கோபுர மின் விளக்குகளும், 450 சோடியம் ஆவி விளக்குகளும் PPP முறையில் M/S. Schnell Energy Equipments Ltd நிறுவனம் பராமரித்து வருகிறது.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 15 W LED விளக்கு | – | 2363 |
| சோடியம் ஆவிவிளக்கு | – | 450 |
| உயர்கோபுர விளக்கு | - | 8 |
| | மொத்தம் | 2821 |

இந்நகராட்சியில் பராமரிப்பில் நடத்தப்பட்டு வரும் இரு மேல்நிலைப்பள்ளி நீங்கலாக கீழ்கண்ட மேல்நிலைப்பள்ளிகள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1. வைரவிழா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 1 |
| 2. பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 1 |
| 3. அமலா மெட்ரிக்குலேசன் பள்ளி | 1 |
| 4. சாரதா மேல்நிலைப்பள்ளி | 1 |
| 5. பாரதி வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி | 1 |

இந்நகர எல்லைக்குள் நடத்தப்பட்டுவரும் மேல்நிலைப்பள்ளிகள் இந்நகராட்சிக்கு போதுமானதாகும்.

**சத்துணவு**

இந்நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜிஆர் சத்துணவுத்திட்டத்தின்கீழ் 2 வயது முதல் 4 வயது வரையிலான 15 மையங்கள் நடைபெற்று வந்தது. மாவட்ட திட்ட அலுவலர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் 328 திட்டம், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/1710/2003 நாள் 11.3.2004ன்படி மேற்படி 15 மையங்களும் 1.4.2004 முதல் அங்கன்வாடி மையங்களாக மாற்றம் செய்து கோபிசெட்டிபாளையம் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ் இந்நகராட்சியில் 5 வயது முதல் 9வயது வரையிலும் 10 வயது முதல் 14 வயது வரையிலும் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு 7 பள்ளிசத்துணவு மையங்களின் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது. பயனடைந்தவர்களின் எண்ணிக்கை தினசரி 947 ஆகும்.

நகராட்சி பள்ளிகள் 7ம் சொந்த கட்டிடங்களில் நடந்து வருகிறது. மேலும், இந்நகராட்சி பாலவித்யா ஆரம்பபள்ளி 24.1.2003 முதல் நகராட்சி நடுநிலைப்பள்ளியுடன் இணைக்கப்பட்டு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

## 4. இதர வரவு

**கல்வி**

நகராட்சி எல்லைக்குள் உள்ள ஆரம்பப்பள்ளி ஒன்று, நடுநிலைப்பள்ளிகள் இரண்டு, உயர்நிலைப்பள்ளிகள் இரண்டு மற்றும் ஒரு ஆண்கள் , ஒரு பெண்கள் ஆக இரண்டு மேல்நிலைப்பள்ளிகள் தொடர்ந்து நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2) 1.4.90 முதல் நகராட்சி பள்ளிகளின் நிர்வாகம் அரசினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு ஊதியம் மற்றும் படிகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

**பொது நூல் நிலையங்கள்**

இந்நகர் மன்றம் மற்றும் தனியாரால் எவ்விதமான நூலகமும் நடத்தப்படவில்லை. மாவட்ட நூலக ஆணைக்குழுவால் 3 நூலகங்கள் இந்நகரில் நடத்தப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் நூலக வரியாக வசூல் தொகை ரூ.33,96,910– வசூல் ஆகியுள்ளது. மேலும், நூலக ஆணை குழுவிற்கு அறிக்கையாண்டில் ரூ. 33,96,910/– செலுத்தப்பட்டுள்ளது.

**பொது சுகாதாரம்**

**மருத்துவ வசதி**

நகராட்சியால் பொது சுகாதார துறையுடன் இணைந்து நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களின் வசதிக்காக அரசினரின் மருத்துவமனை இந்நகரில் உள்ளது.

**பொதுக்கழிப்பிடங்கள்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பொது மக்கள் உபயோகத்திற்கான கட்டண கழிப்பிடங்கள் புதிய பேருந்து நிலையத்தில் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பொது மக்கள் உபயோகத்திற்காக 32 பொது நீர் துலக்கி கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

துப்புரவு தொழிலாளர்கள் நலன்கள் குறைந்த வருவாய் ஊழியர்களுக்கான இந்நகராட்சி 72 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண் துப்புரவு ஊழியர்களுக்கு தலா 2 முழுகால் பாலியஸ்டர் சட்டையும், 2 அரைக்கை சட்டையும் 2 மீட்டர் தலைபாகையும், பெண் ஊழியர்களுக்கு தலா 2 சேலையும், 2 ரவிக்கைகளும் எல்லோருக்கும் ஒரு ஜோடி பாதணியும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. துப்புரவுப்பணிக்காக 2 டிப்பர் லாரிகள், 3 டம்பர் பிளேசர்கள், 1 கழிவு நீர் இறைக்கும் லாரி, குடிநீர் விநியோக லாரி 1 வீடு வீடாக குப்பை சேகரிக்கும் தள்ளுவண்டிகள் 85 மேலும் குப்பை பெட்டிகள் மற்றும் பேட்டரி வண்டிகள் 14 ( Tumber Plazzar ) குப்பைகள் இல்லாத நகரமாக உருவாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>கேடும் அருவருப்பும் தரும் தொழில்கள்</u>

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249 (1)(எ) பிரிவின்படி நகராட்சி எல்லைக்குள் உணவுப்பொருட்கள் விற்பனை செய்பவர்களுக்கும், இயந்திர நிறுவனங்களுக்கும் உரிமையாணை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. கேடும், அருவருப்பும் தரும் தொழில்கள் நடக்கும் இடங்களை துப்புரவுஅலுவலரால் காலமுறைப்படி பார்வையிடப்படுகிறது. உரிமையாணை நிபந்தனைகளை மீறி நடத்துபவர்களின் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உரிமையாணை கட்டணம் மூலம் ரூ.6,60,415 /– வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.

<u>குறைந்த செலவில் நவீன கழிப்பிடம் கட்டுதல்</u>

நகரில் உள்ள தனியார் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் தற்போது குறைந்த செலவிலான நவீன கழிப்பிடங்களாக மாற்றப்பட்டுள்ளதால் தற்போது நகரில் மலம் எடுக்கும் பணியிலிருந்து துப்புரவு தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு வேறு துப்புரவுப்பணி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தூய்மை பாரதம் இயக்கத்தின் கீழ் ரூ.8000/- மானியத்துடன் 637 கழிப்பிடங்கள் இந்நகரில் கட்டி முடிக்கப்பட்டள்ளது.

<u>தடுப்பூசித்திட்டம்</u>

அறிக்கையாண்டில் நாடு தழுவிய போலியோ ஒழிப்பு திட்டம் 16 முகாம்களில் 10.03.2019ம் தேதிகளில் செம்மையாக செயல்படுத்தப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு ஆணையாளர், மருத்துவ வல்லுநர்கள், ரோட்டரி சங்கத்தினர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு உரிய காலத்திற்குள் தடுப்பூசி போடாவிட்டால் ஏற்படும் நோய்களைப்பற்றி விளக்கமாக எடுத்துக்கூறி தடுப்பூசியின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தினர். மேலும் சுவரொட்டிகள் மற்றும் திரையரங்குகளின் சிலைடுகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது. மொத்தம் 5722 குழந்தைகளுக்கு 1 தவணை போலியோ மருந்து கொடுக்கப்பட்டது.

<u>குடிநீர் திட்டம்</u>

ஈரோடு மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாகவும் முதல் நிலை நகராட்சியாகவும் கோபிசெட்டிபாளையம் நகராட்சி உள்ளது. இந்நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் 1958 ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. நகரிலிருந்து வடமேற்கு திசையில் சுமார் 6.00 கி.மீ. தொலைவில் ஓடிக்கொண்டிருக்கிறது. பவானி ஆற்றில் தென்கரையில் செங்கலரை என்ற இடத்தில் தலைமை குடிநீரேற்று நிலையம் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் 1951 ம்ஆண்டு மக்கள் தொகை 33,500 ஆகும். 12.5 கு.தி. இரண்டு மோட்டார் நதி நீர் இறைப்பு நிலையத்திலும் 30.00 குதிரை திறன் கொண்ட இரண்டு மோட்டார் சுத்த நீர் இறைப்பு நிலையத்தில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. தலைமை குடிநீர் நிலையத்திலிருந்து 12 அங்குல வார்ப்பு இரும்பு பிரதான குழாய் மூலம் நீர் இறைக்கப்பட்டு சத்தி மெயின் ரோட்டில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு பொது மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது. மேல்நிலைத்தொட்டி கொள்ளளவு 5,11,875 இலட்சம் பிரதான குழாயின் மொத்தம் நீளம் 4.8 கி.மீ. ஆக இருந்தது.

நகரில் பெருகி வரும் மக்கட் தொகைக்கு ஏற்ப குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க 1978ம் ஆண்டில் ரூ.15.7 இலட்சம் செலவில் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நதிநீர் இறைக்க இயங்கி வந்த 12.5 கு.தி. மின்மோட்டார் பம்பு செட்டுகளுக்கு பதிலாக 17.5 கு.தி. கொண்ட பம்புகளும் நதிநீர் இறைப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டன. இவை ஒரு நிமிடத்திற்கு 3070 லிட்டர் வீதம் 17.00 மீட்டர் உயரத்திற்கு நீர் உறிஞ்சும் திறன் கொண்டவை அதுபோன்றே சுத்த நீர் இறைக்க இயங்கி வந்த 30.00 கு.தி. கொண்ட மோட்டார் பம்புகள் மாற்றப்பட்டு 50.00 கு.தி. கொண்ட இரண்டு புதிய பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டது. இந்த புதிய பம்பு செட்டுகள் 51.00 மீட்டர் உயரத்திற்கு 3000 லிட்டர் நீர் இறைக்கக்கூடிய திறன் கொண்டவையாக இருந்தன.

2000 ம் ஆண்டில் ரூ.167.01 இலட்சம் செலவில் குடிநீர் அபிவிருத்திப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பெற்று பணிகள் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றில் மூன்று மேல்நிலைத்தொட்டிகள் கட்டுதல் குடிநீர் விநியோக குழாய்கள் இல்லாத இடங்களுக்கு புதியதாக விநியோக குழாய் போடுதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு

உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும்மேற்படி திட்டத்தின் மூலம் ஆற்று நீரை இறைக்கும் தலைமை நிலையத்தில் கூடுதலாக ஒரு சுத்திகரிப்பு நிலையம் கட்டும்பணி முடிக்கப்பட்டு விட்டது. 17.5 கு.தி. மின் மோட்டாருக்கு பதிலாக 35.00 கு.தி. மின் மோட்டார் 2 யூனிட் மாற்றப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீரை உந்தும் 50.0 கு.தி. மின் மோட்டாரும் 100 கே.வி.ஏ. மின் மாற்றிகளை 200 கே.வி.ஏ. மின் மாற்றியாக மாற்றி அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் ரூ. 469.86 லட்சத்தில் குடிநீர் அபிவிருத்தி மேம்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்ட பணியில் தலைமை நீரேற்று நிலையத்தின் நதிநீர் இறைப்பு ஏற்கனவே இயங்கி வந்த இரண்டு 35 குதிரை வேகத்திறன் கொண்ட டர்பைன் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மாற்றாக இரண்டு 50 கு.வே. திறன் கொண்ட டர்பைன் மோட்டார் பம்புசெட்டுகள் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மேலும், புதிய 20 குதிரை வேகத்திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் ஒன்றும், 30 குதிரைத்.திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் ஒன்றும் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. 2 புதிய 8 MLD மற்றும் 3 MLD கொள்ளளவு கொண்ட காற்றூட்டிகள் கட்டப்பட்டு (Aeroator) இயக்கத்தில் இருந்து வருகிறது. மேலும், சுத்தநீர் இறைப்பு நிலையத்தில் புதியதாக ஏற்கனவே இயக்கத்தில் உள்ள மோட்டார்களுக்கு மாற்றாக 75 குதிரை வேகத்திறன் கொண்ட மோட்டார்கள் 3 எண்ணம் நிறுவப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகிறது. மேலும், தலைமை நீரேற்று நிலையத்தின் அனைத்து அத்தியாவசியமான பராமரிப்பு பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், 300 MM பிரதான நீர் உந்து குழாய்கள் 30.00 கி.மீ. அளவிற்கு புதியதாகவும், நிலையில் உள்ள 300 MM பிரதான நீர் உந்து குழாய்கள் சீரமைப்பு பணிகளும் 29.30 கி.மீ. அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

நகர் முழுவதும் பகிர்மானக்குழாய்கள் 120.00 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் 7 இலட்சம் / லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர் தேக்கத்தொட்டி புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

சாய்பாபா நகரில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இயக்குதலும், பேணுதலும் இடை நிரப்பு நிதி திட்டம் 2013–14 ன்கீழ் பூரணி நகர் மற்றும் ஜெய் துர்க்கை நகரில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி புதிதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

தலைமை நீரேற்று நிலையத்தில் தினசரி 24 மணி நேரமும் மின் மோட்டார் இயக்கப்பட்டு நாளொன்றுக்கு 61.50 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 59523 மக்கள் தொகை கொண்டதாகும். மக்கள் தொகை கணக்கீட்டின்படி தேவைப்படும் குடிநீரின் அளவு 5.36mld. தற்போது பவானி ஆற்றிலிருந்து மற்றும் உள்ளூர் நீராதாரங்களின் வழியாக பெறப்படும் குடிநீரின் அளவு 6.13 எம்எல்டி ஆகும். பெறப்படும் குடிநீரைக் கொண்டு நகரின் 30 வார்டுகளிலும் நபர் ஒன்றுக்கு 103 லிட்டர் வீதம் 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2018–19–ன் கீழ் ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் மேம்பாடு செய்யும் பணிக்கு அரசாணை எண். (எம் எஸ்) 82 நாள்.23.08.2018ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடிநீர் திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதல் திறன் கொண்ட புதிய மின் மோட்டார்கள் அமைக்கவும், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்பாடு செய்திடவும், தற்சமயம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலைத் தொட்டிக்கும் நீர் ஏற்றப்படும் மூன்று குடிநீர் உந்து குழாய்களை மாற்றி ஒரே உந்து குழாயாக 17.934 கி.மீக்கு நீளத்திற்கு புதியதாக அமைக்கவும், குடிநீர் உந்து குழாய் மற்றும் விநியோக குழாய்களை தாங்கும் வகையில் 5 இடங்களில் தாங்கு பாலம் (Pipe carrying bridge) அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் நகரில் உள்ள அனைத்து குடிநீர் விநியோக குழாய்களையும் மாற்றி டிஎம்ஏ பகுதி அடிப்படையில் புதிய குடிநீர் விநியோக பகுதிகளாக பிரித்து 130.941 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் அமைக்கவும், நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் புதிய குடிநீர் இணைப்புகள் 19491 எண்ணிக்கை வழங்கிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 28.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு 06.03.2019 முதல் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்சமயம் குடிநீர் விநியோக குழாய்கள் 24.633 கி.மீ நீளத்திற்கு விநியோகம் செய்யப்பட்டு 13.845 கி.மீ நீளத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் 31.08.2020க்குள் முடிக்கப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் இந்நகருக்கு கூடுதலாக 4.81 எம்எல்டி நீர் கிடைக்கும் மேலும் தினசரி சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

நகரில் பல்வேறு திட்டத்தின்கீழ் கைபம்பு பொருத்தப்பட்ட 97ஆழ்துளை கிணறுகளும் 1.5 கு.தி. மின்மோட்டார் பொருத்தப்பட்ட 180 ஆழ்துளை கிணறுகளும் பொது மக்கள் உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சியில் பழுதடையும் ஆழ்குழாய் கிணறு கை பம்புகள்மற்றும் சிறு விசை பம்புகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு தடையின்றி இயங்கும் நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியில் 5 பொதுக்கிணறுகள் மற்றும் 195 பொது குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாதவாறு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு குடிநீர் குழாய் இணைப்பகம் உள்ளது.

| | |
|---|---|
| | **2018–2019** |
| 1. வீட்டு உபயோகத்திற்கான மீட்டர் பொருத்திய இணைப்புகள் | 11585 |
| 2. வீட்டு உபயோகமற்ற மீட்டர் பொருத்திய இணைப்புகள் | 221 |
| மொத்தம் | 11806 |

இந்நகர்மன்றம் குடிநீர் கட்டணங்களை 01.10.2013 முதல் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

| கணக்கீட்டு வகைகள் | 01.10.2013 ல் கட்டண விகிதம் 1000 லிட்டருக்கு |
|---|---|
| 1) வீட்டு உபயோகம் மீட்டர் | 10 |
| 2) வீட்டு உபயோகம் அல்லாதது (மீட்டர்) | -- |
| அ) தொழிற்சாலைகள் | 20 |
| ஆ) வணிக இடங்கள் | 20 |

| | |
|---|---|
| 3) குழாய் கட்டணம் வீட்டுஉபயோகம் மாதத்திற்கு | ரூ. 90/– |
| 4) வீட்டு உபயோகம் அல்லாதது | |
| அ) தொழிற்சாலைகள் மாதத்திற்கு | ரூ. 500/– |
| ஆ) வணிக இடங்கள் | ரூ. 500/– |

மேற்கண்ட திருத்திய விகிதங்கள் இநந்நகர் மன்றத்தின் 30.05.2013 ந் தேதி 464 எண் தீர்மானத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வினியோக துணை விதிகளை திருத்தம் செய்து மேற்பார்வைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது அனுமதி பெற்று இவ்வலுவலக ந.க.எண். 2560/2013/இ1 நாள் 02.08.2013 மூலம் வரி உயர்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், நகர்மன்றத்தீர்மான எண் 509 நாள் 29.07.2013ன்படி 01.10.2013 முதல் குடிநீர் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

**வடிகால் மற்றும் பலவகை**

இந்நகராட்சியில் பெரும் பகுதிகளில் சிமெண்ட் தளம் போட்ட திறந்த வடிகால்கள் தான் உள்ளது. சிமெண்ட் தளம்போட்ட வடிகால் நீளம் 100.00 கி.மீ. மண் வடிகால் 45 கி.மீ. ஆகும்.

**பொது**

**வருவாய் வரத்தக்க இனங்கள்**

வாரச்சந்தை, தினசரி சந்தை, பேருந்து நிலையம் மற்றும் குறைந்த வருவாய் பிரிவுக்கான குடியிருப்பு வீடுகள், அலுவலர் குடியிருப்புகள், நகராட்சி கடைகள் ஆகியவைகள் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**போக்குவரத்து பேருந்து**

இந்நகராட்சியில் எவ்வித போக்குவரத்து பேருந்துகள் நடத்தப்படவில்லை. தனியார் கம்பெனிகளும், தமிழ்நாடு அரசை சார்ந்த போக்குவரத்து கழகங்களாலும் நடத்தப்படும் நகர பேருந்து போக்குவரத்தால் இந்நகரம் பயனடைந்து வருகிறது.

| ஆண்டு | சந்தைகள் | பேருந்து நிலையம் | ஆடு வதை செய்யுமிடம் |
|---|---|---|---|
| 2018-2019 | 2 | 1 | 1 |

**சந்தைகள்**

**தினசரி சந்தை**

இந்நகராட்சி ஒரு தினசரி சந்தையை பராமரித்து வருகிறது. அதன் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ. 20,00,000 /— ஆகும். சென்ற ஆண்டு கிடைத்த வருமானம் ரூ.19,95,455 /— ஆகும்.

**வாரச்சந்தை**

இந்நகராட்சியால் மொடச்சூர் ரோட்டில் ஒரு வார சந்தை பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் வருமானம் அறிக்கையாண்டில் ரூ.16,20,701 /— சென்ற ஆண்டு ரூ.10,14,300 /—ஆகும்.

**பேருந்து நிலையம்**

ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித்திட்டத்தில் 1986 ம்ஆண்டில் புதிதாக இரண்டாம் தர பேருந்து நிலையம் கட்டப்பட்டு கட்டண வசூல் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.7,40,000 /— ஆகும். சென்ற ஆண்டு வருமானம் ரூ.7,33,316/— ஆகும். பேருந்து நிலையத்தில் கட்டணம் செலுத்தி பயன்படுத்தப்படும் கழிப்பிடம் ஒன்று (ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக) உள்ளது. அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ.8,82,665/- சென்ற ஆண்டு வருமானம் ரூ.8,40,630/— ஆகும். ஒவ்வொரு பேருந்துக்கும் ரூ.12/—வீதம் நுழைவுக்கட்டணம் 7.8.2003 முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**ஆடுவதை செய்யுமிடம்**

அறிக்கையாண்டில் ஆடுவதை செய்வதற்காக இடம் தொடர்ந்து இருந்து வருகிறது. வதை செய்யப்படும் கால்நடைகளை பரிசோதிப்பதற்காக அரசினர் கால்நடை மருத்துவருக்கு மாதம் ரூ.80/— வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் ஆடுவதை செய்யுமிடத்தில் வருமானம் ரூ.29,510/— ஆகும். சென்ற ஆண்டு வருமானம் ரூ.25,445/— ஆகும்.

**மரம் நடுதலும், பூங்காக்களும்**

அறிக்கையாண்டில் தொடர்ந்து ஏழு பூங்கா பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்காக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்புகளை தடுக்க வேலி அமைக்கப்பட்டுள்ளது. 1.8.2002 முதல் இப்பூங்காவை இலவசமாக பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டு வருகிறது. சிறுவர்களுக்கு என விளையாட்டு இடம் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் பூங்காவிலும் நகரின் பல சாலை ஓரங்களிலும் நடப்பட்ட மரங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டு உள்ளன.

| | |
|---|---|
| 1. ஆரம்பத்தில் இருந்த மரங்களின் எண்ணிக்கை | 5535 |
| 2. புதியதாக நடப்பட்டது | -- |
| 3. பட்டுப்போனது / மழைகாற்று காரணமாக விழுந்தது | 4 |
| 4. ஆண்டு இறுதியில் உயிருடன் இருந்த மரங்களின் எண்ணிக்கை | 5531 |

**நகரமைப்பு**

1.4.2018 முதல் 31.03.2019 வரை திரு. S. சேகரன், நகரமைப்பு அலுவலராக நாளது தேதி வரை பணிபுரிந்து வருகிறார்.

**கோபிசெட்டிபாளையம் முழுமைத்திட்டம்**

இத்திட்டம் 2011 ம் வருடம் வரை அமுலில் உள்ளது. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 13 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இதர பலன் தரும் முயற்சிகள்**

இதர பலன் தரும் முயற்சிகள் ஏதும் இல்லை

## பொது வருவாய்

**வருவாய் கணக்கு**

இந்நகராட்சியில் உள்ள வீடுகளுக்கும் காலியிடங்களுக்கும் நகராட்சியில் விதிக்கப்படும் வரியின் விபரம் அதன் விகிதமும் கீழே தரப்பட்டுள்ளது.

| வீட்டு வரி | கட்டிடங்கள் மீது அரையாண்டு வருடவாடகை மதிப்பீடு | காலியிடங்களின் மீது ஆண்டுக்கு சொத்து மதிப்பீடு |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1) சொத்து வரி | 1 % | ¼ % |
| 2) தண்ணீர் வரி | 6 % | 1/ 8 % |
| 3) கழிவு அகற்றும் லாரி | 2 % | 1/ 16 % |
| 4) கல்வி வரி | 2 ½ % | 1/ 8 % |
| 5) விளக்கு வரி | 1 ½ % | 1/ 16 % |
| 6) ஜலதாரை வரி | ½ % | 1/ 8 % |
| 7) நூல் நிலைய வரி | சொத்து வரியில் ரூபாய்க்கு பத்து பைசா | |

**தொழில் வரி**

தமிழ்நாடு சட்டம் 24/92ன் படி இந்நகராட்சியில் நுண்ணறிவுத்திறன் தொழில்கள் மரபு தொழில்கள் பணித்தொழில்கள் ஆகியவற்றின் மீதான புதிய தொழில்வரி விகிதங்கள் 1.10.2003 முதல் அமுல்படுத்தப்பட்டு 1.10.2008 முதல் முந்தைய தொழில்வரி விகிதத்தில் 35 % உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.10.2013 முதல் முந்தைய தொழில் வரி விகிதத்தில் 25 சதவீதம் உயர்வு செய்யப்பட்டு வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**வரி விகிதம்**

மக்கள் தொகை கணக்கின்படி நபர் ஒன்றுக்கு வரிவிகிதம் ரூ.1037 ஆகும். சென்ற ஆண்டு ரூ.571.73/– ஆக இருந்தது.

**கட்டிடங்கள்**

முந்தைய ஆண்டில் 2017–2018 ல் இந்நகரில் வரிவிதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 19655 தற்போது 2018–2019 ம் ஆண்டில் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 791 ஆக மொத்தம் 19903 ஆகும்.

**காலி இடங்கள்**

தற்போது 01.10.2009 வரை இரண்டாம் அரையாண்டு முதல் அரசாணை எண் 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 20.08.2009ன்படி காலியிடங்களுக்கு வரி விதிக்கப்படும் போது சதுர அடி மதிப்பீட்டின்படி வரிவிதிப்பு செய்யப்படுகிறது.

**கேட்பு, வசூல், பாக்கி**

வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவை மற்றும் நடப்பு சேர்த்து விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | கேட்பு ரூ | வசூல் ரூ | தள்ளுபடி ரூ | பாக்கி ரூ | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2008-2009 | 52935220 | 34753205 | - | 18182015 | 66.00 |
| 2009-2010 | 44529159 | 39722435 | - | 4806724 | 89.21 |
| 2010-2011 | 28161900 | 26042383 | - | 2119517 | 92.47 |
| 2011-2012 | 47922556 | 47180679 | - | 741877 | 92.89 |
| 2012-2013 | 56391973 | 51939635 | - | 4452338 | 92.10 |
| 2013-2014 | 57002961 | 55764460 | - | 1238501 | 97.83 |
| 2014-2015 | 63692845 | 62879789 | - | 813056 | 93.70 |
| 2015-2016 | 68196198 | 67376892 | - | 819306 | 94.47 |
| 2016-2017 | 71426765 | 69179663 | - | 2247102 | 92.32 |
| 2017-2018 | 8210300 | 7174900 | - | 1035400 | 87.38 |
| 2018/2019 | 93799000 | 68725500 | , | 23655000 | 73.27 |

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## வருவாய் மற்றும் மூலதன நிதி

| 2018–19 ம் ஆண்டு முதலீடுகள் பற்றிய விபரம் | | | | | | | | இணைப்பு எண். 11 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விபரம் | ஆரம்ப இருப்பு | நடப்பாண்டு முதலீடு | பெறப்பட்ட வட்டி | திரும்ப பெறப்பட்ட தொகை | மறு முதலீடு தொகை | பெறப்பட வேண்டிய வட்டி | முதிர்வு தொகை | முதிர்வு |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | தேதி |
| 1 | IOB 065404000001382/ 0851018/18.05.17 | 3467923 | | 194289 | 3662212 | 0 | 0 | 0 | 02.07.2018 |
| 2 | IOB-065404501401287/ 043943/07.09.2017 | 42550 | | 3941 | 0 | 46491 | 4366 | 50857 | 04.06.2020 |
| 3 | IOB-065404000001380/ 0851020/18.05.2017 | 1050508 | | 128207 | 0 | 1178715 | 79742 | 1258457 | 12.05.2020 |
| **TOTAL** | | **4560981** | **0** | **326437** | **3662212** | **1225206** | **84108** | **1309314** | |

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## குடிநீர் மற்றும் வடிகால் நிதி
## 2018-19 ம் ஆண்டு முதலீடுகள் பற்றிய விபரம்

| வ. எண் | விபரம் | ஆரம்ப இருப்பு | நடப்பாண்டு முதலீடு | பெறப்பட்ட வட்டி | திரும்ப பெறப்பட்ட வேண்டிய தொகை | மறு முதலீடு தொகை | பெறப்பட வேண்டிய வட்டி | முதிர்வு தொகை | முதிர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | தேதி |
| 1 | IOB 065404501401284/ 043942-W.S.D- / 31.08.2018 | 2385608 | | 135868 | 0 | 2521476 | 320877 | 2842353 | 05.06.2020 |
| 2 | 30728144433/S.B.I-31.03.2019 | 1190456 | | -11814 | 1178642 | 0 | 0 | 0 | 27.11.2018 |
| 3 | I.O.B 065404000001381/ 0851019/14.05.2018 | 1894003 | | 231151 | 0 | 2125154 | 143770 | 2268924 | 14.05.2020 |
| 4 | I.O.B 065404000001383/ 0851017/14.05.2018 | 10646010 | | 542469 | 0 | 11188479 | 756918 | 11945397 | 14.05.2019 |
| 5 | IDBI 1120106000001243/ 83268624-26.09.2018 | 3056547 | | 204152 | 0 | 3260699 | 229816 | 3490515 | 27.09.2019 |
| 6 | I.O.B 065404000002824/ 0851528/31.07.2018 | | 3187519.4 | 228303 | 0 | 3415822.4 | 228304 | 3644126.4 | 31.07.2020 |
| **TOTAL** | | **19172624** | **3187519.4** | **1330129** | **1178642** | **22511630.4** | **1679685** | **24191315.4** | |

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## கல்வி நிதி
## 2018–19 ம் ஆண்டு முதலீடுகள் பற்றிய விபரம்

| வ. எண் | விபரம் | ஆரம்ப இருப்பு | நடப்பாண்டு முதலீடு | பெறப்பட்ட வட்டி(1067) | திரும்ப பெறப்பட்ட தொகை | மறு முதலீடு தொகை(3070) | பெறப்பட வேண்டிய வட்டி | முதிர்வு தொகை | முதிர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | தேதி |
| 1 | இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் 0851586/08.08.18 | 2331010 | | 152785 | | 2483795 | 152785 | 2636580 | 08.08.19 |
| 2 | IOB 043944/08.08.2018 | 1676199 | | 109865 | | 1786064 | 120830 | 1906894 | 08.08.19 |
| 3 | IOB 043946/08.08.2018 | 2606421 | | 114060 | | 2720481 | 184045 | 2904526 | 08.08.19 |
| 4 | யூனியன் பேங்க்– 503903030025373/ 24..12.2017 | 1790070 | | 128380 | 1918450 | 0 | 0 | 0 | 19.01.19 |
| 5 | IDBI 76322137/10.08.2018 | 3489347 | | 233059 | | 3722406 | 256468 | 3978874 | 11.08.19 |
| 6 | IOB /0375090/ 18.01.2019 | | 83150 | 0 | | 83150 | 5625 | 88775 | 18.01.20 |
| **TOTAL** | | **11893047** | **83150** | **738149** | **1918450** | **10795896** | **719753** | **11515649** | |

### தணிக்கை

இந்நகராட்சியில் தணிக்கை முடிவுற்ற வருடமான 2017-18 உடன் சேர்த்து மொத்த தணிக்கை பத்திகளாக சுமார் 321 நிலுவையில் உள்ளது. அறிக்கை ஆண்டில் 282 தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள தணிக்கை பத்திகளுக்கான 39 பதில்கள் நீக்கம் செய்ய தயார் நிலையில் உள்ளது.

### இருப்பும் பொறுப்பும்

அறிக்கையாண்டில் உள்ள வழக்குகள் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ஆண்டு ஆரம்பத்தில் இருந்த வழக்குகள் : 17
2. அறிக்கையாண்டில் தாக்கல் செய்யப்பட்டவை : 9

மொத்தம் **26**

3. தணிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்டவை : 1
4. ஆண்டு முடிவில் நிலுவை வழக்குகள் : 25

### பொது குறிப்புகள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. நிர்வாக அதிகாரிக்கும் நகராட்சி பிரிவு அலுவலர்களுக்குமிடையே சுமூகமாக உறவும் இருந்து நகராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெற்று வருகிறது. நகர்மன்றத்தலைவர், ஆணையாளர், அதிகாரிகள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் இந்நகரின் வளர்ச்சியில் தனி கவனம் செலுத்தி வருகின்றனர். நகராட்சி நிர்வாகம் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

மேலும் அரசினரின் சமூக நலப்பணிகளும், குடும்ப நலத்திட்டம் மற்றும் குழந்தைகள் தடுப்பூசி போடும் திட்டம் முதலிய பணிகளும் சிறந்த முறையில் இந்நகராட்சியில் அமுல்படுத்தப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி.

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 31.07.2018 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் 110 ம் எண் தீர்மான நகல்.

**மன்றப்பொருள்**

இந்நகராட்சியின் 2017–2018 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் தகவலுக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.** மன்றம் பதிவு செய்யலாம் ( க.எண். 1274/2017/சி2)

தீர்மானம் :

**பதிவு செய்யப்பட்டது.**

ஒம் /– கே.எம்.சுதா,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி